## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 360/2019 P.W. 4 / LW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கிருஷ்ணன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.07.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தெரியும். அவர் வண்டி ஓட்டுநர் ஆவார் . கடந்த 10.09.2019 ஆ ம் தேதி காலை 9 . 30 மணிக்கு வீட்டை விட் கிளம்பினார். நான் அன்றைய தினம் வேலைக்கு போகாததால் கடைத்தெருவிற்கு வந்திருந்தேன். மன்னார்குடி ெதற்கு வீதி, கீழவீதி முனை அருகே காலை 10 மணி அளவில் எனது மாமனார் சௌரிராஜன் சைக்கிளில் சென்றபோது ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கிரேனை ஓட்டி வந்து எனது மாமனார் மீது மோதிவிட்டார், அதில் சம்பவ இடத்திலேயே அவர் இறந்து விட்டார். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) நான் கொத்தனார் வேலை பார்ப்பதால் பொதுவாக 7 மணிக்கெல்லாம் வீட்டை விட்டு சென்று விடுவேன் என்றால் சரிதான. கிரேனின் முகப்பு எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீளமாகதான் இருக்கும் சுமார் எத்தனை அடி வரை சாலையில் நீட்டிக்கொண்டு இருக்கும் என்றால் 15 வரை நீட்டிக்கொண்டிருக்கும். கிரேனின் முன் வீலுக்கு மேலே ஓட்டுநர் இருக்கை அமைந்திருக்கும் என்றால் சரிதான். முன் வீலுக்கு சற்று நீளமாக பின் வீல் அமைந்திருக்கும் என்று சொன்னால் சரிதான்.

2) கீழவீதியின் கிழக்கு புறம் கோவில் இருக்கிறதா? என்றால் நான் கவனித்ததில்லை. மேற்படி இடத்தின் நான்கு புறமும் வணி வளாகங்கள் , டீக்கடை, சிகை அலங்காரக்கடை , பழக்கடை மற்றும் இருசக்கர வாகனம்பழுது நீக்கும் கடை ஆகியவைகள் நெருக்கமாக நிறைய கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் ஜன நடமாட்டம் அதிகம் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

3) சம்பவ இடத்தில் உள்ள கடைக்காரர்கள் அனைவரும் என்னுடன் சம்பவத்தை பார்த்தார்களா? என்றால் ஆம் பார்த்தார்கள். எத்தனை மணிக்கு காவலர்கள் வந்தார்கள் என்றால் ஒரு 10 நிமிடத்தில் வந்து விட்டார்கள். போலீசாருக்கு யார் தகவல் கொடுத்தார்கள் எ ன்று எனக்கு தெரியாது. போலீசார் வந்துதான் எனது மாமனாரின் பிரேதத்தை அப்புறப்படுத்தினார்கள் என்றால் சரிதான்.

4) போலீசார் வந்தபோது எனது மாமனாரின் சைக்கிள் , கிரேன், அதன் அடியில் இருந்த எனது மாமனாரின் பிரேதம் ஆகியவற்றை எல்லாம் பார்த்து எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனது மனைவி சம்பவ இடத்திற்கு எப்பொழுது வந்தார்கள் என்றால் எனது மாமனாரின் பிரேதம் சம்பவ இடத்தில் இருக்கும்போதே வந்து விட்டார்.

5) சம்பவம் நடந்த உடன் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சம்பவ இடத்தில் இருந்தாரா? என்றால் ஆம் இருந்தார். அவரை போலீசார் அழைத்துச்சென்றார்களா? என்றால் அதனை நான் பார்க்கவில்லை. இந்த வழக்கில் புகார் எப்பொழுது , எத்தனை மணிக்கு , எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்றால் எனது மாமனார் பிரேதத்தை மருத்துவமனையில் ஒப்படைத்து விட்டு பிறகு காவல்நிலையம் வந்து சுமார் 10.30 மணிக்கு நான்தான் காவல்நிலையத்தில் வைத்து கொடுத்தேன்.

6) அதன்பிறகு போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது மாமனாரின் சைக்கிள் என்ன ஆனது என்று எனக்கு தெரியுமா ? என்றால் நான் சம்பவ இடத்தில் இருந்து வீட்டுக்கு எடுத்துச்சென்று விட்டேன். கும்பகோணம் சாலை என்று போலீசார் விசாரணையில் நான் ஒரு போதும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தால் அது என்னால் சொல்லப்பட்டது அல்ல.

7) சம்பவ இடமானது தென் வடலாக உள்ள பஸ் போக்கு வரத்து நிறைந்த பிரதான சாலை என்று சொன்னால் சரிதான். கிழக்கு மேற்காக உள்ள தெற்கு வீதி

சாலை என்பது தெருவிற்கான சாலை என்று சொன்னால் சரிதான். தெரு சாலையில் இருந்து பிரதான சாலைக்கு செல்லவேண்டும் என்றால் அந்த நபர்தான் பொறுமையாக நின்று , நிதானமாக பொது பிரதான சாலையை பார்த்து, கடக்கவோ, பயணிக்கவோ வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

8) சம்பவ காலத்தில் எனது மாமனார் பஸ்ஸ்டாண்டில் உள்ள வீரா டீக்கடையில் டீ மற்றும் சரக்கு மாஸ்டர் என்று சொன்னால் சரிகதான். அன்றைய தினம் எனது மாமனார்தான் டீக்கடைக்கு நேரமாகிவிட்டது என்று சைக்கிளில் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் சென்று பிரதான சாலையில் நின்று நிதானித்து செல்லாமல் , முறையாக பயணித்து சென்ற கிரேனின் பின் சக்கரத்தேில் போய் சைக்கிளை மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், மேற்படி விபத்திற்கு எனது மாமனாரின் அஜாக்கிரதைதான் காரணம் என்றும் இறந்து நபருக்கு நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக போலீசார் அவரது கவனக்குறை மறைத்து எங்களுக்கு ஆதரவாக ஆவணங்களை ஜோடித்து பொய் வழக்கு உருவாக்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

9) நான் அன்றைய தினம் சம்பவ இடத்தில் இல்லை என்றும், எனது மனைவி தகவல் தெரிவித்ததன் பேரில்தான் சம்பவத்தை கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு வந்தேன் என்றும், இறந்த நபரின் மருமகன் என்ற ஒரே காரணத்திற்காக நான் கண்ணுற்ற சாட்சியாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கும் , குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 360/2019 P.W. 5 / LW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **காளியப்பன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.07.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு தெரியாது. நான் கீழராஜவீதியில் உள்ள அறிவு திருக்கோயில் அருகில் பஞ்சர் கடை வைத்துள்ளேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மாதம், தேதி சரியாக ஞாபகம் எனக்கு இல்லை . காலை 8.30, 9 மணி இருக்கும் நான் கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது எல்லாரும் கூட்டமாக ஓடினார்கள், நானும் ஓடினேன். கிரேன் வண்டிக்கு கீழே ஒரு நபர் கிடந்தார், அதற்கு மேல் சைக்கிள் கிடந்தது, ப்ரண்டு டயர் அதில் மேல் ஏறி நின்றது. அதனை நான் பார்த்தேன் , போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**1)** எனக்கு எந்த சக்கரத்தில் செளரிராஜன் கிடந்தார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியும். இடது புறம் முன்பக்க சக்கரத்தில் கிடந்தார். போலீசார் எப்பொழுது வந்தார்கள் என்றால் சம்பவ இடத்திற்கு வந்தார்கள், சரியாக எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. யார் வாகனங்களை அப்புறப்படுத்தினார்கள்ள ன்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் ரத்தம் கொட்டிக்கிடந்ததான என்றால் அதனை நான் பார்க்கவில்லை.

2) சம்பவ இடத்திலிருந்து சுமார் 15 அடி துாரத்தில் எதிரே எனது கடை உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தொடர்ச்சியாக எனது கடையில்தான்இருந்தேன். நான் அன்றைய தினம் சம்பவத்தை பின்னிட்டு போய் பார்க்கவில்லை என்றாலும், அந்த இடத்தில் எனது கடை இருப்பதால் போலீசார் எனது முகவரியை கேட்டு என்னை விசாரித்ததாக ஜோடித்திருந்த வாக்குமூலத்தின் அடிப்படையில், போலீசார்

சொல்லிக்கொடுத்ததன் பேரில் இடது புற சக்கரத்தில் கிடந்தார் என்று பொய்யாக முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

3) உண்மையிலேயே நான் சம்பவ இடத்தில் இருந்திருந்த பின்னிட்டு சம்பவ ஸ்தலத்தை பார்த்திருந்தால் ரத்தம் கொட்டி இருந்ததா? என்பது குறித்தும் வாகனங்கள், பிரேதம் அப்புறப்படுத்தப்பட்ட விவரம் எனக்கு நேரிட்டு தெரிந்திருக்கும் என்றும் நான் ஜோடிக்கப்பட்ட சாட்சி என்பதால்தான் குறிப்பாக விவரங்களை தெரிவிக்க தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.